(11) 176047

1982-6-11

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க,

# காட்டு (திருத்தச்) சட்டம்

---

[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுததபபடடது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1982, மார்ச்சு மாதம் 26 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : சதம் 55

தபாற் செலவு : சதம் 50

1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, காட்டு (திருத்தச்) சட்டம்

[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 4/81.
1434

## காட்டுக்கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, காட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) காட்டுக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :— 451 ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய காலத்துக்கான மறியற்றண்டனைக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதில் உடந்தையாக இருக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் தவறைப் புரிவிக்கின்ற எவரேனும் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (ஊ) என்னும் பந்திகளின் கீழான தவறொன்றைப் புரிவதில் உடந்தையாக இருக்கின்ற அல்லது புரிவிக்கின்ற விடயத்தில், ஓராண்டுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் வேறு ஏதேனும் பந்தியின் கீழான தவறொன்றைப் புரிவதில் உடந்தையாக இருக்கின்ற அல்லது புரிவிக்கின்ற விடயத்தில், அத்தகைய தவறுக்கு அந்த உட்பிரிவினால் விதித்துரைக்கப்பட்டவாறான அதே தண்டனைக்கும்,

ஆளாதலும் வேண்டும்." ; அத்துடன்

(இ) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும் :—

"(3) காடுகள் காப்பாளரின் எழுத்திலான அனுமதியுடனன்றி இப்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.".

2—எ 61593—6,775 (02/82)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, முதன்மைச்சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது :—

"(2) இவ்வத்தியாயத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதில் உடந்தையாக இருக்கின்ற அல்லது ஏதேனும் அத்தகைய தவறைப் புரிவிக்கின்ற எவரேனும் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்—

(அ) இருபத்தோராம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்று தவிர்ந்த அப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்றன் விடயத்தில், ஓராயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஓராண்டுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ;

(ஆ) இருபத்தோராம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்றன் விடயத்தில், ஆறு மாதங்களுக்குக் குறையாததும் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும்,

ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை திருத்துதல்.

4. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :—

(அ) "ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத ஒரு குற்றப்பணத்தினால் அல்லது ஆறு மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய மறியற்றண்டனையினால்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத ஒரு குற்றப்பணத்தினால் அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாததும் ஓர் ஆண்டுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனையினால்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவுக்கான காப்புவாசகத்திலுள்ள "இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கான மறியற்றண்டனையினால்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஆறு மாதங்களுக்குக் குறையாததும் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனையினால்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, முதன்மைச்சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) "ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத ஒரு குற்றப்பணத்தினால் அல்லது ஆறு மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய மறியற்றண்டனையினால்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இருநூறு ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததுமான ஒரு குற்றப்பணத்தினால் அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனையினால், அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்திலுள்ள "இரண்டாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத குற்றப்பணம் ஒன்றினால் அல்லது ஓராண்டுக்கு நீடிக்கக்கூடிய மறியற்றண்டனையினால்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இருநூறு ரூபாவுக்குக் குறையாததும் இரண்டாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததுமான குற்றப்பணம் ஒன்றினால் அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஓர் ஆண்டுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனையினால்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) "ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்திலுள்ள "ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய மறியற்றண்டனைக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இருநூறு ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததுமான ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு அதிகமாகாததுமான ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததுமான ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு அதிகமாகாததுமான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

7. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

'வெட்டு மரம், காட்டு விளையுள் முதலியனவற்றைப் பறிமுதல் செய்தல்.

40. (1) காடு சம்பந்தமான தவறொன்றுக்கென எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் மேல்—

(அ) அரசின் ஆதனம் அல்லாதனவும் அவற்றின் தொடர்பாக அத்தகைய தவறு புரியப்பட்டனவுமான எல்லா வெட்டுமரங்களும் அல்லது காட்டு விளையுள்களும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட எல்லாக் கருவிகளும், படகுகளும், வண்டிகளும், கால்நடைகளும், மோட்டார் வாகனங்களும் (அத்தகைய கருவிகள், படகுகள், வண்டிகள், கால்நடைகள் அத்துடன் மோட்டார் வாகனங்கள் அத்தகைய ஆளுக்குச் சொந்தமானவையாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி,)

அத்தகைய குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் காரணமாக அரசுக்குப் பறிமுதலாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அரசுக்குப் பறிமுதலாக்கப்பட்ட எதேனும் ஆதனம்—

(அ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதிருப்பின், அத்தகைய குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தற்கென விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடையும் தேதியன்று தொடங்கி அரசுக்குப் பூரணமாக உரித்தானதாகும்;

(ஆ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு ஒன்று செய்யப்பட்டிருப்பின், அத்தகைய குற்றத்தீர்ப்பு மேன்முறையீட்டில் உறுதி செய்யப்படும் தேதியன்று தொடங்கி அரசுக்குப் பூரணமாக உரித்தானதாகும்.

இவ்வுட்பிரிவில், "இயைபான குற்றத்தீர்ப்பு" என்பது, எக்குற்றத்தீர்ப்பினைப் பின்பற்றி (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் ஆதனம் அரசுக்குப் பறிமுதல் செய்யப்பட்டதோ அக்குற்றத்தீர்ப்பு எனப்பொருளாகும்.'.

8. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, "முடிக்குரிய ஆதனமாக அல்லது பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக" என்ற சொற்களுக்குப் பதிலாக "அரசின் ஆதனமாக அல்லது 40 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதாக" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச்சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு "40 ஆம் அல்லது 41 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் கட்டளை" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "41 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் கட்டளை" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச்சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவை நீக்குதல்.

11. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும்,—

(அ) இக்கட்டளைச்சட்டத்தின் 24 ஆம், 27 ஆம், 37 ஆம் அல்லது 48 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக, காட்டு அலுவலர் ஒருவரின் பணிகளைப் புரிவதற்கென, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரச மரக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியருக்கு ; அல்லது

(ஆ) இக்கட்டளைச்சட்டத்தின் 27 ஆம், 37 ஆம், அல்லது 48 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக காட்டு அலுவலர் ஒருவரின் பணிகளைப் புரிவதற்கென 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரசப் பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனச் சட்டத்

தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் அல்லது 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் அல்லது கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் எவரேனும் ஊழியருக்கு,

அமைச்சர் அதிகாரமளிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஊழியர் எவரும் இப்பணிகளைப் புரிவதில் ஈடுபட்டிருக்கும்போது காட்டு அலுவலர் ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.".